## வத்தளை பிரதேச சபை
## கம்பஹா மாவட்டம்

### 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 25 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 யூலை 16 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2014 மார்ச் 05 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வத்தளை பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது தொழில் கடன்கொடுத்தோரான ரூபா 1,394,000 தொகையும் களஞ்சியக் கடன்கொடுத்தோரான ரூபா 2,149,024 ஆக ரூபா 3,543,024 கூட்டுத்தொகை கூடுதலாக ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஹெந்தல விழா மண்டபத்தின் வாடகைக்காக 2009 மே 20 ஆம் திகதி வழங்கப்பட்ட 574122 ஆம் இலக்க ரூபா 974,800 கூட்டுத்தொகையான காசோலைகள் மதிப்பிழந்து காணப்பட்ட

போதிலும் மதிப்பிழந்த காசோலைக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு 03 ஆண்டுகளாக முன்கொண்டு வரப்பட்டிருந்தன.

(இ) 2012 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 10,483,536 தொகையான மற்றும் வழங்கப்பட்ட ரூபா 9,959,483 தொகையான பொருட்கள் இலங்கை சனநாயகக் குடியரசின் நிதிப் பிரமாணத்தின் 751 இன் பிரகாரம் இருப்புப் பதிவேடுகளில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் மற்றும் வழங்கல்களுக்காக இருப்புப் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 104,089,045 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்திற்கு மேலான மீண்டுவரும் செலவினம் ரூபா 49,175,931 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்திற்கு மேலான மீண்டுவரும் செலவினம் ரூபா 96,685,580 ஆக இருந்தது.

**2.2 நிதிக் கட்டுப்பாடு**

(அ) கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிராத 119 காசோலைகளின் பெறுமதி ரூபா 1,235,301 தொகை 2010 ஆம் ஆண்டின் போது நானாவித வைப்புக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் இதில் 98 காசோலைகளும் அரசாங்க நிறுவகங்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய காசோலைகளாகக் காணப்பட்டன.

(ஆ) 2008 ஆம் ஆண்டு முதல் நிலவி வரும் ரூபா 449,024 பெறுமதியான காலாவதியான 18 காசோலைகள் தொடர்பாக இலங்கை சனநாயகக் குடியரசின் நிதிப் பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் வழங்கல்களுக்காகச் செலுத்தப்பட்டிருந்த பெறுமதி சேர் வரித் தொகையான ரூபா 430,192 தொகை முடிவுறுத்தல் வரியிலிருந்து தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 வருமான நிர்வாகம்**

**2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரால் மீளாய்வாண்டிற்கு உரித்தாக மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.2 வீதவரி**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவையான வீதவரி மீதி ரூபா 76,007,474 ஆகக் காணப்பட்டதுடன் இதில் ரூபா 5,000 இற்கு மேலான நிலுவையான வீதவரி 1658 அலகுகள் ரூபா 21,894,517 தொகையும் ரூபா 50,000 இற்கு மேலான நிலுவையான வீதவரி 38 அலகுகள் ரூபா 7,090,056 தொகையும் காணப்பட்டன. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் படி நிலுவையான வரியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 ஏனைய வருமானம்**

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவையான ஏனைய வருமானத் தொகை ரூபா 20,610,578 ஆகக் காணப்பட்டதுடன் இதில் 1 முதல் 3 ஆண்டுகள் வரையான காலமாக நிலுவையான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,500,579 தொகையும் 3 முதல் 5 ஆண்டுகள் வரையான காலமாக நிலுவையான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,128,221 தொகையும் 5

ஆண்டுகளுக்கு மேலான காலமாக நிலுவையான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,498,913 தொகையாகவும் காணப்பட்டது.

**2.4 டெங்கு செயற்திட்டம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டு வரை உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றி அமைய மற்றும் ஒப்பந்த அடிப்படையில் டெங்கு செயற்திட்டத்திற்காக 117 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன் அவ் ஊழியர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 22,281,065 தொகை சம்பளம் மற்றும் படிப்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) அவ் ஊழியர்களுக்காக குறித்த கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை. ஹெந்தல உப அலுவலகத்திற்குத் தொடர்பான டெங்கு ஒழிப்பு ஊழியர்களின் 2013 சனவரி மாத வருகைப் பதிவேடு, சம்பளப் பட்டியலுடன் கடமைகள் ஒப்படைப்பு பரீட்சிக்கப்படுகையில் இவ் ஊழியர்கள் சுகாதார ஊழியர்கள், வீதி ஊழியர்கள் மற்றும் அலுவலகப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன் டெங்கு ஒழிப்பு செயற்திட்டங்களுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தமைக்கான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அமைய மற்றும் செயற்திட்ட ஊழியர்கள் 117 பேர் 2003 ஆம் ஆண்டு முதல் 2012 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது சேர்க்கப்பட்டிருந்த போதிலும் 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச்சட்டத்தின் 10(1) மற்றும் 10(2) ஆம் பிரிவின் படி சபைப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த சகல அமைய, பணி ஒப்படை ஊழியர்களுக்காக ஊழியர் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்புத் தொகை அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 தாமதமான செயற்திட்டங்கள்**

2012 ஆம் ஆண்டின் போது கடன்கொடுத்தோரின் கீழ் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 3,281,000 பெறுமதியான சபை நிதியத்தின் 05 செயற்திட்டங்கள்

கணக்காய்வுத் தினமாகிய 2013 ஒக்டோபர் 28 ஆம் திகதி வரையிலும் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 2.6 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 5,325,364 பெறுமதியான 20 ஏக்கர் 38 பேர்ச் காணிகளும் 29 கட்டிடங்களுக்குமாக அளவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உறுதிகள் தயாரிக்கப்படுவதற்கு கணக்காய்வுத் தினமாகிய 2013 ஒக்டோபர் 28 ஆம் திகதி வரையிலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் இக் காணிகளில் மேற்கொள்ளப்படும் நிர்மாணிப்புகள் மற்றும் மேம்பாடுகளின் பெறுமதி ரூபா 116,280,493 ஆகக் காணப்பட்டது.

(ஆ) சபைக்கு உரித்தான ஆதனங்கள் (காணி, கட்டிடங்கள்) முறையான வகையில் எல்லைகள் குறிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் காணி, கட்டிடத்தின் கீழ் ரூபா 1,892,161 பெறுமதியான 9 காணிகள் 2013 செப்தெம்பர் 13 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட மெய்மையாய்வின் போது இனங்காணப்படாதவையாக அறிக்கையிடப்பட்டிருந்தன.

(இ) நிலையான சொத்துப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 6,086,839 பெறுமதியான 7 காணித் துண்டுகளும், பெறுமதி குறிப்பிடப்பட்டிராத 4 காணித் துண்டுகளும் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்ததுடன் அக் காணித் துண்டுகள் இது வரையிலும் பௌதீக ரீதியாக இனங்காணப்பட முடியாத நிலையில் இருந்தமை கண்டறியப்பட்டது.

(ஈ) இறுதிக் கணக்குகளின் படி, பெறுமதி ரூபா 2,158,357 தொகையான தீயணைக்கும் வண்டி 2003 நவம்பர் 05 ஆம் திகதி வெலசர கடற்படைக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த போதிலும் அவ் வண்டியை மீளப் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.7 திண்மக் கழிவு முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2012 சனவரி 07 ஆம் திகதி முதல் 2013 சனவரி 06 ஆம் திகதி வரையான 01 வருட காலத்திற்குச் செல்லுபடியாகும் வகையில் மேல்மாகாண கழிவுப் பொருள் முகாமைத்துவ அதிகாரசபையுடன் ஓர் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் படி கால எல்லை பூர்த்தியடைவதற்கு முன்னர் இரு தரப்பினராலும் முறையான ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2013 ஒக்டோபர் 28 ஆம் திகதி வரையிலும் முறையான ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புரிந்துணர்வு உடன்படிக்கையின் படி 2012 சனவரி 07 ஆம் திகதி முதல் கட்டுப்பாட்டு அதிகாரப்பகுதியில் சேகரிக்கப்படும் வேறாக்கப்பட்ட உக்கலடையும் கழிவுப் பொருட்கள் மற்றும் மீள்சுழற்சிக்காகப் பயன்படுத்தப்படக்கூடிய உக்கலடையாத கழிவுப் பொருட்கள் பகுதிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும். 2012 ஆகஸ்ட் மாதம் முதல் சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளான வெலிசறை, பமுணுகம பகுதிகளிலும் ஹெந்தல அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியின் ஒரு பகுதியிலிருந்து மாத்திரம் வெலிசறை பொருளாதார நிலையத்தின் உக்கலடையும் கழிவுப் பொருட்கள் மாத்திரம் உயிரியல் வாயுப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்தது.

(இ) உயிரியல் வாயுப் பிரிவிற்கு வழங்கப்படாது ஹெந்தல அதிகார எல்லைக்குட்பட்ட பகுதியில் உக்கலடையாத கழிவுப் பொருட்களும் சபைக்கு உரித்தான ஏனைய பகுதிகளில் உக்கலடையும் மற்றும் உக்கலடையாத கழிவுப் பொருட்கள் சபையின் ஓர் காணியில் இடப்பட்டு மண் இடப்பட்டிருந்ததுடன் இதனால் நீண்ட கால புவியியல் நீர் முறைமை, நீர் மார்க்க மாசடைவு போன்ற சுற்றாடல் தாக்கங்கள் ஏற்படுவதற்கு பெருமளவில் இடமுள்ளமை கணக்காய்வின் போது தவிர்க்கப்பட முடியாதிருந்தது.

(ஈ) கழிவுப் பொருட்களைப் பதனிடும் மண்ணிற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த பணத் தொகை ரூபா 2,967,790 ஆகும்.

**2.8 இனங்காணப்பட்ட நட்டங்களும் இழப்புகளும்**

---

சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் தொடர்பாக சபை செயற்பட்டிராமையால் சபைக்கு எதிராக தொடரப்பட்டுள்ள 03 வழக்குகளுக்காக 2012, 2013 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 348,359 தொகையான வழக்குக் கட்டணம் செலுத்தப்பட நேர்ந்தது.

**3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) சொத்து முகாமைத்துவம்
(ஈ) இருப்புக் கட்டுப்பாடு
(உ) மனிதவள முகாமைத்துவம்